# <u>சங்க இலக்கியம்</u>

சங்க காலம் கி.மு இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி இரண்டாம் நூற்றாண்டு வரை இதில் கருத்து வேறுபாடு உண்டு.

தமிழுக்கே உரிய இலக்கியங்கள் சங்க இலக்கியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம் சங்க காலத்தில் பாடப்பட்டதால் சங்க இலக்கியம் என பெயர் பெற்றது என்பர் சிலர்.

வச்சிரணந்தியின் சங்கத்தில் தொகுக்கப்பட்டதால் சங்க இலக்கியம் என பெயர் பெற்றது என்பவர் சிலர்.

இந்தியாவில் பேச்சு வழக்கில் உள்ள மொழிகளின் இலக்கியங்களில் மிக பழமையானவை சங்க இலக்கியங்கள்.

தமிழில் செவ்வியல் இலக்கியம், உயர் தனி இலக்கியம் என்ற சிறப்புக்கு உரிய இலக்கியம் சங்க இலக்கியம்.

திணை இலக்கியம் எனப்படுவது சங்க இலக்கியம் அகப்பாடல்கள் அனைத்தும் பாத்திரக் கூற்றுக்கள், புறப்பாடல்கள் அனைத்தும் புலவர் கூற்றுக்கள்.

உள்ளுறை, இறைச்சி நிறைந்த இலக்கியம் சங்க இலக்கியம் சங்க இலக்கியத்திற்கு பதிணெண் மேற்கணக்கு என பெயரும் உண்டு.

கணக்கு என்பதற்கு நூல் என்று பொருள் கணக்கு என்பதற்கு அறம் என்ற பொருளும் உண்டு என்பார் ரத்தின சபாபதி.

சங்க இலக்கியத்தை சான்றோர் செய்யுட்கள் என்பர். அவ்வாறு சொன்னவர் தொல்காப்பிய உரை ஆசிரியர் பேராசிரியர் ஆவார்.

சங்க நூல்கள், இலக்கியங்கள் என்று முதலில் சொன்னவர் களவியல் உரை ஆசிரியர் நக்கீரர்.

மேற்கணக்கு என்பது வாழ்வியலை விரித்துக் கூறுவதன் மூலம் நீதிகளை கூறுவது.

கீழ்க்கணக்கு என்பது வாழ்க்கையின் சாரம்சத்தை சுருக்கமாய் சுட்டி நீதிகளைக் கூறுவது.

அறமும், இன்பமும் சேர்ந்த நூல் சங்க இலக்கியம். தமிழரின் அடையாளமாக விளங்குவது சங்க இலக்கியம்.

எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் சங்க இலக்கியங்கள் ஆகும்.

தொகை என்பது பல புலவர்கள் பாடிய பாடல்களைக் கொண்ட நூல். பாட்டு என்பது தனி ஒரு புலவர் பாடிய நூல்.

எட்டுத்தொகை:-

நற்றிணை நல்ல குறுந்தொகை, ஐங்குறு நூறு, ஒத்த பதிற்றுப் பத்து ஓங்கு பரிபாடல், கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம், புறம் என்று இத்திறந்த எட்டுத்தொகை,

எட்டுத்தொகையுள் அக நூல்கள் ஐந்து, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கழித்தொகை, அகநானூறு எட்டுத்தொகையில் புறநூல்கள் இரண்டு பதிற்றுப்பத்து, புறநானூறு எட்டுத்தொகையுள் அகமும், புறமும் கலந்த நூல் ஒன்று பரிபாடல்.

எட்டுத்தொகையுள் பாடலால் பெயர் பெற்ற நூல் இரண்டு கலித்தொகை (கலிப்பா), பரிபாடல் (பரிபாட்டு) எட்டுத்தொகையுள் காலத்தால் முந்தியது புறநானூறு, எட்டுத்தொகையுள் காலத்தால் பிந்திய நூல்கள் கலித் தொகையும் பரிபாடலும் ஆகும்.

வேறு பெயர்கள்:-

அகநானூறு - அகம், அகப்பாட்டு, நெடுந்தொகை

புறநானூறு - புறம், புறப்பாட்டு, புறம்பு நானூறு,

பத்துப்பாட்டு:-

முருகு பொருநாறு பாண்ணிரெண்டு முல்லை, பெருகு வள மதுரைக் காஞ்சி, மருவிணிய கோல நெடுநல் வாடை, கோல் குறிஞ்சி பட்டின பாலை காடா தொடும் பத்து.

1. திருமுருகாற்றுப்படை
2. பொருநராற்றுப்படை
3. சிறுபாணாற்றுப்படை
4. பெரும் பாணாற்றுப்படை
5. முல்லைப் பாட்டு
6. மதுரைக் காஞ்சி
7. நெடுநல் வாடை
8. குறிஞ்சிப் பாட்டு
9. பட்டினப் பாலை
10. மலைபாடும் கடாம்.

<u>வேறு பெயர்கள்:-</u>

திருமுருகாற்றுப்படை - புலவராற்றுப்படை

பெரும்பாணாற்றுப்படை - பாணாறு

முல்லைப்பாட்டு - நெஞ்சாற்றுப்படை

குறிஞ்சிப்பாட்டு - பெருங்குறிச்சி

பட்டினப்பாலை - வஞ்சி நெடும்பாட்டு

மலைபடுகடாம் - கூத்தராற்றுப்படை

பத்துப்பாட்டில் அக நூல்கள் - 3

முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பாட்டினப்பாலை, பத்துப்பாட்டில் புறநூல்கள்-6

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, மலைபடுகடாம்.

பத்துப்பாட்டில் அகமா, புறமா என்ற கருத்து வேறுபாட்டை தோற்றுவித்த நூல் ஒன்று நெடுநல்வாடை.

ஆற்றுப்படை நூல்கள்- 5.

ஆற்றுப்படை என்று பெயர் பெற்ற நூல்கள்- 4.

பத்துப்பாட்டில் சிறிய நூல் முல்லைப்பாட்டு – (103 அடி)

பத்துப்பாட்டில் பெரிய நூல் மதுரைக்காஞ்சி – (782 அடி)

ஆற்றுப்படை நூல்களுள் சிறியது பொருநராற்றுப்படை – (248 அடி)

ஆற்றுப்படை நூல்களில் பெரியது மலைபடும் கடாம் - (583 அடி)

தினையால் பெயர் பெற்ற நூல்கள் – 4.

அகத்தினை – 3 (முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை)

புறத்திணை – 1 (மதுரை காஞ்சி)

காலத்தால் (அல்லது) பருவத்தால் பெயர் பெற்ற நூல் – 1. (நெடுநல்வாடை)